பொலிஸ் ஆணைக்குழுவிற்கு :

திரு. நிஷாந்த ஏ. வீரசிங்ஹ அவர்கள்,

செயலாளர்,

தேசிய பொலிஸ் ஆணைக்குழு,

பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டப வளாகம்,

கட்டிட இலக்கம் 09,

கொழும்பு 07.

2020 மார்ச் 06.

செயலாளர் அவர்களே,

**தேர்தல் காலப்பகுதியினுள் பதவி நிலை மற்றும் ஏனைய பொலிஸ் பதவியினர்களை தமது சேவைத் தளத்திலிருந்து இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்**

இந்நாட்டின் தேர்தல் செயற்பாட்டின் முன்னணி பங்குதாரர் என்ற வகையில் இலங்கை பொலிஸ் கடந்த சனாதிபதித் தேர்தலின் போது ஆற்றிய பணி தொடர்பில் இங்கு எமது பாராட்டுக்களை முதலில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள வகையில், எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல் காலப்பகுதியில் இலங்கை பொலிஸானது உரிய மத்தியஸ்தத்தினை மேற்கொள்ளும் என்பது எமது முழுமையான நம்பிக்கையாகும்.

அதன்போது, தமது சேவைத் தளத்தில் நிலையாக பணிபுரியும் பொலிஸ் அலுவலர்களுக்கு தமது பணியினை எதுவிதமான அழுத்தங்களுமின்றி மேற்கொள்வதற்கான சூழலை ஏற்படுத்துவது மிகவும் தீர்மானமிக்க ஒரு விடயமாக அமையும்.

அவ்வாறானதொரு பின்னணி ஏற்படுத்தப்படும் என்பதனை நாம் ஆர்வத்துடன் எதிர்பார்க்கின்ற அதேவேளை தற்போது எமக்கு கிடைத்துள்ள சில கண்காணிப்புத் தகவல்களின் படி அறியக் கிடைத்த விடயம் யாதெனில், பதவி நிலை அலுவலராகிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உச்சித் லியனகே அவர்கள், இதுவரையில் பணியாற்றிய சீதாவக்கை பொலிஸ் அதிகார பிரதேசத்திலிருந்து இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதான செய்தியாகும். அவ்விடமாற்றம் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்திற்கான பிரதிப் பணிப்பாளராக என்பதாகும்.

அதற்கு மாற்றீடாக அண்மையில் மிகவும் முரண்பாடான வகையில் மிகமிக அவசரமாக அனுராதபுரம் பிரதேசத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரது பிரத்தியேக உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் வெதமுல்ல அவர்களை நியமிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தகவல் கிடைத்துள்ளன. இந்த வகையில் விடயங்கள் இடம்பெறுவதாயின், மேற்படி ஒட்டுமொத்த செயற்பாடும் பாரதூரமான வகையில் கேள்விக்குரியாகிவிடும் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது.

தேசிய மட்டடத்திலான தேர்தலொன்றினை அண்மித்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில், அவ்வாறானதொரு இடமாற்றத்தினை வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது என்பது தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல் ஆலோசனைகள் மீறப்படுவதாகும் என்பதே எமது கருத்தாகும். அத்துடன் இந்நாட்டின் தேர்தல் செயற்பாட்டில் நீண்டகாலமாக நிலைத்திருக்கக் கூடிய ஓர் சிறந்த கையாளுகையாக நாம் காண்பது தேர்தல் காலப்பகுதியில் அவ்வாறானதொரு இடமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவைப்பாடு எழுகின்ற சந்தர்ப்பத்தில், உடனடியாக தேர்தல் ஆணைக்குழுவினை விசாரிப்பதே என்பதாகும். அவ்வாறு உரிய ஒருங்கமைப்புடன் மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய சேவைகள் தொடர்பிலான பல அனுபவங்களை தற்போதைய பொலிஸ்மா அதிபர் (பதில் கடமை) அவர்கள் கொண்டிருப்பார் என்பதும் எமது நம்பிக்கையாகும்.

மேலும் அவ்வாறானதொரு தேவைப்பாடு ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் இதுவரையில் பின்பற்றப்பட்ட சம்பிரதாயமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறையாகவும் காணப்படுவது தேர்தல் ஆணைக்குழுவினதும்

முறையான ஒருங்கிணைப்பினையும் கொண்டதாக நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது இந்நாட்டில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை எதிர்பார்க்கின்ற எந்தவொரு பிரசையினதும் எதிர்பார்ப்பாகும்.

அதன்படி மேலே தெரிவிக்கப்பட்ட வகையில் யாதாயினும் அவசர இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அல்லது மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாயின் அதனை சீர்திருத்துவதற்கு தங்களது ஆணைக்குழுவின் தயவான கவனம் செலுத்தப்படும் என்பதனை நாம் பரிபூரணமாக எதிர்பார்ப்பதுடன் எதுவிதமான அரசியல் அல்லது வேறு யாதாயினும் அழுத்தங்கள் காணப்படினும் அவ்வாறான தடைகளை தகர்த்து இலங்கை பொலிஸிற்கே உரிய தனித்துவமான கௌரவத்தினை இத்தேர்தலின் போது பாதுகாப்பது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினது உயரிய பொறுப்பு என்பதனை மிக அழுத்தமாக சுட்டிக் காட்டுகின்றோம்.

இந்நாட்டின் சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பில் எதிர்பாராத மற்றும் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள் பல முன்வைக்கப்படுகின்ற ஓர் பின்னணியில் அதற்குரிய சுதந்திரமானதுமான பெருமையானதுமான பின்னணியைக் கட்டியெழுப்ப வேண்டியது ஆணைக்குழுவேயாகும். அவை வெறும் சங்கடமான மற்றும் ஆச்சரியமான தீர்மானங்களாகவன்றி அவை தொலைநோக்குடனான, விவேகமான மற்றும் நடைமுறைச் சாத்தியமான வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என நாம் ஆணித்தனமாக எதிர்பார்க்கின்றோம்.

இந்நாட்டில் பொலிஸ் ஆணைக்குழுவொன்று இயங்காத, மற்றும் தேர்தல் ஆணைக்குழுவேனும் தாபிக்கப்படாதிருந்த காலப்பகுதியிலிருந்து தேர்தல்கள் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து இவ்வாறான நடவடிக்கைகளை மிகவும் ஒத்துழைப்புடனும் முறையான ஒருங்கிணைப்புடனும் மேற்கொண்டன என்பதனை நாம் இங்கு விருப்பத்துடன் நினைவு கூறுகின்றோம். அது மட்டுமன்றி அவ்வாறான மிகச் சிறந்த தொடர்புகளினூடாக மிகச் சிறப்பான பெறுபேறுகளை அடைந்து கொண்டமை தொடர்பிலும் நாம் மிகவும் மகிழ்ச்சியுடன் நினைவு கூறுகின்றோம்.

மேலும், தங்களது ஆணைக்குழுவானது இந்நாட்டின் தேர்தல் செயற்பாட்டின் மேம்பாட்டிற்கென மேற்கொள்ளும் எந்தவிதமான நடவடிக்கைகளுக்கும் எமது முழுமையான ஒத்துழைப்பினை நல்குவோம் என்பதனையும் சுட்டிக் காட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

மேற்படி விடயம் தொடர்பில் தாங்கள் காட்டும் ஆர்வத்தினை மிகச் சிறப்பாக பாராட்டுகின்றோம்.

**மஞ்சுள கஜநாயக்க**

தேசிய ஒருங்கிணைப்பாளர்

பிரதிகள் :

திரு. மஹிந்த தேஷப்பிரிய, தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு, தேர்தல்கள் செயலகம், சரண வீதி, இராஜகிரிய.

திரு. எச்.எம்.டி..டீ. ஹேரத், செயலாளர், தேர்தல் ஆணைக்குழு, தேர்தல்கள் செயலகம், சரண வீதி, இராஜகிரிய.

திரு. சீ.டீ.. விக்கிரமரத்ன, பொலிஸ்மா அதிபர் (பதில் கடமை), இலங்கை பொலிஸ், பொலிஸ் தலைமையகம், கொழும்பு 01.

திரு. எம்.கே. சமன் ஸ்ரீ ரத்நாயக்க, ஆணையாளர் நாயகம், தேர்தல் ஆணைக்குழு, தேர்தல்கள் செயலகம், சரண வீதி, இராஜகிரிய.

திரு. பிரியந்த வீரசூரிய, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் (தேர்தல்கள்), இலங்கைப் பொலிஸ், பொலிஸ் தலைமையகம், கொழும்பு 01.

திரு. சுரங்க ரணசிங்ஹ, உதவித் தேர்தல் ஆணையாளர், தேர்தல் ஆணைக்குழு, தேர்தல்கள் செயலகம், சரண வீதி, இராஜகிரிய.

திரு. அஷோக்க தர்மசேன, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், (பணிப்பாளர் – தேர்தல்), இலங்கை பொலிஸ், பொலிஸ் தலைமையகம், கொழும்பு 01.